27.06.2024

அ.வ.எண்.34/2016

திருமால் (D.W.3)

<u>குறுக்கு விசாரணை :</u>

1. என்ன வழக்கு போட்டுள்ளார் என்று தெரியாது என்றால் சொத்து எங்களுக்குவேண்டுமென்று வழக்கு போட்டுள்ளார்கள். யார் யார் வழக்கு போட்டுள்ளார்கள் என்று தெரியுமா என்றால் ராஜையனின் 3-வது மகன் வழக்கு போட்டுள்ளார். என்னை சாட்சியமளிக்க யார் என்னை கூப்பிட்டார்கள் என்றால் ரமேஷின் மனைவி அழைத்தார். என்னுடைய வீடு இருப்பது கருங்கல் கிராமத்தில் என்றால் சரிதான். இவ்வழக்கில் எத்தனை பட்டிகை மற்றும் எவ்வளவு சென்ட் சொத்து விவரத்தில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் 1 சொத்து 7 சென்டாகும். எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறும்போது வழக்குரையில் குறிப்பிட்டது போன்று ஸ்தலத்தில் இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் தெற்கு பக்கம் முள்வேலி போட்டுள்ளதாக வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது. வழக்குரையில் வழக்கு சொத்திற்கு மேற்கு பக்கம் என்ன உள்ளது என்று குறிப்பிடபட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. அதைபோன்று வடக்கு மற்றும் கிழக்கு பக்கத்தில் என்ன உள்ளது என்று தெரியுமா என்றால் வழக்கு பட்டிகையை பார்க்கவில்லை. வழக்கு பட்டிகைசொத்து எந்த வில்லேஜில் உள்ளது என்றால் கருங்கல் வில்லேஜில் உள்ளது. அது தனியாக உட்பிரிவு செய்யப்பட்டு விட்டதா என்றால் உட்பிரிவு செய்யப்பட்டு விட்டது. அதன் எவ்வளவு சென்ட் என்றால் 7 சென்ட் ஆகும். அதன் றீசர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது.

2. சாலையை தொடக்கூடிய சொத்தா என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தில் வீடு உள்ளதா என்றால் இல்லை. வழக்கு பட்டிகை சொத்தை சுற்றி வீடுகள் உள்ளதா என்றால் வடக்கு மற்றும் மேற்கு பக்கம் உள்ளது தெற்கு மற்றும் கிழக்கு பக்கம் இல்லை. வழக்கு பட்டிகை சொத்து சம்மந்தப்பட்ட ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. செல்வநாயகம் எப்போது இறந்த என்று தெரியுமா என்றால் 90-ஆம் ஆண்டு இறந்தார். மாதம் நாள் தெரியுமா என்றால் தெரியாது. கிறிஸ்தவ முறைப்படி அடக்கம் செய்தார்களா இல்லை இந்து முறைப்படி அடக்கம் செய்தார்களா என்றால் இந்து முறைப்படி அடக்கம் செய்தார்கள். நான் சொல்வது

போன்று இந்து முறைப்படி அடக்கம் செய்யவில்லை என்றாலும் அவரை ஏரித்து விட்டார்கள் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு பட்டிகை சொத்தை பற்றியோ அல்லது வழக்கை பற்றியோ எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல. வாதியும் பிரதிவாதியும் பெரியப்பா, சித்தப்பா மகன்கள் ஆவர்கள். ஆனால் எனது சாட்சியத்தில் அவர்கள் இரண்டு பேரும் உறவினர்கள் என்று சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றாலும் ஆனால் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. வழக்கு சொத்து முழுக்க முழுக்க வாதிகளுடைய கைவசம் மற்றும் அனுபவத்தில் தான் உள்ளது என்றாலும் அந்த சொத்தை அபகரிப்பதற்கு பிரதிவாதிகள் முயற்சி செய்வதால் தான் இவ்வழக்கு தொடரப்பட்டது என்றால் சரியல்ல. முள்வேலி அமைக்கப்பட்டு எத்தனை வருடம் இருக்கும் என்றால் 10 வருடம் இருக்கும். மேலும் வாதிகள் அனுபவித்து வந்த சொத்தில் பிரதிவாதிகள் அத்துமீறி நுழைந்து முள்வேலி அமைக்க முயற்சி செய்வதால் தான் இவ்வழக்கு தொடரப்பட்டது என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.